DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 341 / 2022
Deposition of PW5 / LW5

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்வம் |
| Father's / Husband Name | : | சுப்பையா |
| Village | : | கடமலைக்குண்டு |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | வனக்காப்பாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06.08.2025.

**1, 14 ம் எதிரிகள் ஆஜர் . மற்ற எதிரிகள் அனைவரும் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வனக்காப்பாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் என்னுடைய கையொப்பம் இல்லை. நான் எங்கு , எப்போது, எதற்காக யார் கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை .

**<u>அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 05.03.2022 ம் தேதி 11.00 மணியளவில் மயிலாடும்பாறை காவல் நிலைய குற்ற எண். 16/2022 வழக்கின் சம்பவயிடத்தினையும், அதன் சுற்றுப்புறங்களையும் சார்பு ஆய்வாளர் எனது மற்றும் நீதிராஜன் என்பவரின் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும் , நீதிராஜன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலீசார்

**விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.08.06 17:45:24 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 341 / 2022
Deposition of PW4/ LW3

| | |
|---|---|
| Name | : திரு. தவராஜா |
| Father's / Husband Name | : ராசு |
| Village | : குமணன்தொழு |
| Taluk | : ஆண்டிபட்டி |
| Calling | : அரசு பேருந்து ஓட்டுநர் |
| Religion | : இந்து |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06.08.2025.

1, 14 ம் எதிரிகள் ஆஜர் . மற்ற எதிரிகள் அனைவரும் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து அரசு பேருந்தின் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 27.02.2022 ம் தேதி அரசு பேருந்தினை தேனி – வெள்ளிமலைக்கு எடுத்துக் கொண்டுமஞ்சனூத்து வனச்சோதனைச்சாவடி அருகே காலை 6.30 க்கு அ.சா.1 பணியில் இருந்தார். பயணிகள் சுமார் 50 நபர்கள் பேருந்திற்குள் இருந்தார்கள்.

அ.சா.1 செக்போஸ்ட்டினை திறக்க முடியாது என்று கூறினார். அன்றைய தினம் யாரும் உள்ளே வேலைக்கு செல்லக்கூடாது என்று கூறி பேருந்தில் இருந்த நபர்களை கீழே இறங்குமாறு கூறினார். ஆனால் பயணிகள் யாரும் இறங்கவில்லை. சுமார் 1/2 மணிநேரம் பேருந்தினை நிறுத்தி இருந்தேன். அ.சா.1 சோதனைச் சாவடியினை திறக்கவில்லை. அதன் பின்பு பயணிகள் பேருந்தில் இருந்து கீழே இறங்கி அசா.1 உடன் வாக்குவாதம் செய்தார்கள். அதன் பின்பு நான் தேனி போக்குவரத்து பணி

மனைக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். அ.சா.1 யை யார் தாக்கினார்கள்.என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

27.02.2022 ம் தேதி காலை 6.30 க்கு கோரையூத்து – அரசரடி செல்லும் வனச்சோதனை சாவடியில் அ.சா.1 பாதுகாப்பு பணியில் இருந்த போது வெள்ளிமலைக்குச் செல்லும் அரசு பேருந்தில் இருந்தவர்களிடம் அ.சா.1 வெளியூர் நபர்கள் மலை கிராமங்களுக்கு செல்லவேண்டாம் என்று அ.சா.1 சொன்ன போது எதிரிகள் அவரை அசிங்கமாக பேசி, 3 வது எதிரி தவமணி அ.சா.1 ன் ரூ.19 ஆயிரம் மதிப்பிலான செல்போனை பிடுங்கி ரோட்டில் போட்டு உடைத்து சேதப்படுத்தினார் என்றும், 3 முதல் 6 வரையுள்ள எதிரிகள் அ.சா.1 யை கையால் அடித்து காயத்தினை ஏற்படுத்தினார்கள் என்றும், 23 வது எதிரி ஒச்சம்மாள் செருப்பால் அ.சா.1 ன் தலையிலும், கன்னத்திலும் காயத்தினை ஏற்படுத்தினார் என்றும் எதிரிகள் அனைவரும் சேர்ந்து கொண்டு வனக்காவல் பணியினை செய்யவிடாமல் தடுத்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் , அப்போது நானும், அசா.2, அரசு பேருந்தின் நடத்துனர் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை தடுத்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.08.06 17:45:35 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 341 / 2022

Deposition of PW3/ LW2

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அருண் |
| Father's / Husband Name | : | தங்கதுரை |
| Village | : | கூடலூர் வனச்சரகம் |
| Taluk | : | கூடலூர் |
| Calling | : | வனக்காப்பாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06.08.2025.

1, 14 ம் எதிரிகள் ஆஜர் . மற்ற எதிரிகள் அனைவரும் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வனக்காப்பாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். 1 ம் எதிரியை எனக்கு தெரியும். 27.02.2022 ம் தேதி காலை 8.00 க்கு மேல் கடமலைக்குண்டு வனச்சரக வனக்குடியிருப்பில் இருந்த போது வனக்காவலர் செல்லதுரையை மஞ்சனூத்து வனச்சோதனைச்சாவடி அருகே தாக்கிவிட்டதாக உடன் வேலை பார்ப்பவர் கூறினார். நான் எனது இருசக்கர வாகனத்தில் சம்பவயிடம் சென்று போது எனக்கு முன்பாகவே வனச்சரக அலுவலர் மற்றும் காவல் துறை அதிகாரிகள் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். செல்லதுரையை யார் தாக்கினார்கள், என்ன அசிங்கமாக பேசினார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

27.02.2022 ம் தேதி காலை 6.30 க்கு கோரையூத்து – அரசரடி செல்லும் வனச்சோதனை சாவடியில் அ.சா.1 பாதுகாப்பு பணியில் இருந்த போது வெள்ளிமலைக்குச் செல்லும் அரசு பேருந்தில் இருந்தவர்களிடம் அ.சா.1 வெளியூர் நபர்கள் மலை கிராமங்களுக்கு செல்லவேண்டாம் என்று அ.சா.1 சொன்ன போது எதிரிகள் அவரை அசிங்கமாக பேசி, 3 வது எதிரி தவமணி அ.சா.1ன் ரூ.19 ஆயிரம் மதிப்பிலான செல்போனை பிடுங்கி ரோட்டில் போட்டு உடைத்து சேதப்படுத்தினார் என்றும், 3 முதல் 6 வரையுள்ள எதிரிகள் அ.சா.1யை கையால் அடித்து காயத்தினை ஏற்படுத்தினார்கள் என்றும், 23 வது எதிரி ஒச்சம்மாள் செருப்பால் அ.சா.1 ன் தலையிலும், கன்னத்திலும் காயத்தினை ஏற்படுத்தினார் என்றும் எதிரிகள் அனைவரும் சேர்ந்து கொண்டு வனக்காவல் பணியினை செய்யவிடாமல் தடுத்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் , அப்போது நானும், அரசு பேருந்தின் டிரைவர், மற்றும் நடத்துனர் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை தடுத்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.08.06 17:45:45 +0530

Judicial Magistrate,
Andipatti.